## சென்மதி நிலுவை

### பொதுவான போக்குகள்

பொதுவாகச் சென்மதி நிலுவையின் செயலாற்றம், ஆரம்பத்தில் எதிர் பார்க்கப்பட்டதைவிடக் குறிப்பிடத்தக்களவில் குறைந்தளவு சாதகமற்றதாக விளங்கியமை, 1989 இல் இலங்கையின் பொருளாதாரச் செயலாற்றத்தின் அடிப்படைப் பண்புகளில் ஒன்றாக விளங்கியது. சென்மதி நிலுவை இடர்ப்பாடு கள், இவ்வாண்டின் முதல் அரைப்பகுதியில் அதிகரித்துவந்த உள்நாட்டுக் குழப்பங் களுடன் தொடர்புபட்டிருந்தபோதிலும், வர்த்தக மாற்று விகிதம் மோசமடைந் தமையால் இது மேலும் வலுப்பெற்றதுடன், பொதுவான பற்றாக்குறை எதிர் பார்க்கப்பட்ட குறையான சிஎஉ 1,700 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஎஉ 670 இலட்சத்தில் கட்டுப்படுத்தப்பட்டது. 1989 யூன் இறுதியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் சிஎஉ 1,250 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து, ஆண்டின் இறுதியில் சிஎஉ 2,240 இலட்சத்தை அடைந்தது. மொத்த ஒதுக்குகள் 1989 யூனிலான சிஎஉ 3,850 இலட்சத்திலிருந்து திசெம்பரில் சிஎஉ 4,470 இலட்சத் திற்கு உயர்ந்தது. ஏற்றுமதிகளிலான கணிசமான மீட்சி, சுற்றுலாவில் ஏற்பட்ட முன்னேற்றம், பன்னாட்டு நாணய நிதியத்துடனான அமைப்புச் சீராக்க வசதியின் கீழ் இரண்டாவது ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட ஒழுங்கின் பின்னர் பொரு ளாதாரத்தில் நம்பிக்கை மீள அடையப்பட்டமையைத் தொடர்ந்து மூலதனப் பாய்ச்சல் குறைக்கப்பட்டமை என்பனவற்றின் மூலம் வெளிநாட்டுக் கொடுப் பனவு நிலைமைகள் பெருமளவில் மோசமடைவது தவிர்க்கப்பட்டது.

1989 இல் வர்த்தகக் கணக்கு 1988 இன் பற்றாக்குறையான சிஎஉ 5,680 இலட்சத்துடன் (ரூ. 242,680 இலட்சம்) ஒப்பிடுகையில் சிஎஉ 5,420 இலட்சம் (ரூ. 247,160 இலட்சம்) கொண்ட பற்றாக்குறையைப் பதிவுசெய்து சிறிது சாதகமாக அமைந்தது. இரு ஆண்டுகளுக்கிடையில் பணிகள் கணக்கிலான பற்றாக்குறை சிஎஉ 1,140 இலட்சத்திலிருந்து (ரூ. 48,840 இலட்சம்) சிஎஉ 1,170 இலட்சத்திற்கு (ரூ. 53,150 இலட்சம்) அதிகரித்தது. நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறை சிஎஉ 2,900 இலட்சமாக (ரூ. 129,970 இலட்சம்) விளங்கி 1988 இல்சிஎஉநியதிகளில் இருந்த அதே மட்டத்திலேயே இருந்தது. (அட்டவணை 1.44) மொ.உ.உ. இல் நடைமுறைக் கணக்குப் பற்றாக்குறையின் விகிதம் 1988 இன் 5.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 5.1 சதவீதமாக விளங்கியது. அலுவல்சார் மாற்றல்கள் தவிர்ந்த நடைமுறைக் கணக்குப் பற்றாக் குறையின் 1988 இன் சிஎஉ 4,450 இலட்சம் பற்றாக்குறையுடன் (ரூ. 189,650 இலட்சம்) ஒப்பிடுகைல் சிஎஉ 4,250 இலட்சமாக (ரூ. 191,870 இலட்சம்) விளங்குகையில், மொ.உ. உற்பத்தியிலான அதன் விகிதம் இவ்விரு காலப் பகுதிகட்கிடையில் 8.5 சதவீதத்திலிருந்து 7.6 சதவீதத்திற்கு வீழ்ச்சி அடைந்தது. எனினும் மொ.உ. உ.விலான நடைமுறைக் கணக்கின் விகிதம் ஆண்டின் நடுப்பகுதியின் எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடுகளைவிட 3 சதவீதப் புள்ளிகள் குறைவாக விளங்கியது.

1989 இல் தேறிய நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்கள் சிஎஉ 2,520 இலட்சமாக (ரூ. 122,350 இலட்சம்) விளங்கி 30 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. இதன் விளைவாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறையான சிஎஉ 640 இலட்சத்துடன் (ரூ. 33,390 இலட்சம்) ஒப்பிடுகையில், 1989 இன் சென்மதி நிலுவையில் மொத்தப் பற்றாக்குறை சிஎஉ 670 இலட்சமாக (ரூ. 19,050 இலட்சம்) விளங்கியது. ஆண்டின் இறுதியில் சென்மதி நிலுவை

## சென்மதி நிலுவை

ஆண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.44

## சென்மதி நிலுவை — பகுப்பாய்வு வெளிப்படுத்துகை 1985-1989

| விடயம் | சிஎஉ பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாயகளில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) | 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
| 1. வணிகப் பொருட்கள் ... | — 711 | — 649 | — 525 | — 568 | — 542 | —19,801 | —21,390 | —20,005 | —24,268 | —24,716 |
| ஏற்றுமதிகள் ... | 1,296 | 1,029 | 1,077 | 1,098 | 1,206 | 35,728 | 33,893 | 41,097 | 46,985 | 50,094 |
| இறக்குமதிகள் ... | 2,007 | 1,678 | 1,602 | 1,666 | 1,748 | 55,529 | 55,283 | 61,102 | 71,253 | 80,810 |
| 2. பணிகள் ... | — 133 | — 109 | — 121 | — 114 | — 117 | — 3,647 | — 3,616 | — 4,625 | — 4,884 | — 5,315 |
| பெறுகைகள் ... | 323 | 323 | 307 | 306 | 312 | 8,926 | 10,601 | 11,721 | 13,097 | 14,466 |
| கொடுப்பனவுகள் ... | 456 | 432 | 428 | 420 | 429 | 12,573 | 14,217 | 16,346 | 17,981 | 19,781 |
| 3. பொருட்களும் பணிகளும் (1+2) ... | — 844 | — 758 | — 646 | — 682 | — 659 | —23,448 | —25,006 | —24,630 | —29,152 | —30,031 |
| 4. மாற்றல்கள் (தேறிய) ... | 434 | 395 | 381 | 392 | 369 | 12,040 | 13,097 | 14,537 | 16,775 | 17,034 |
| தனியார் (தேறிய) ... | 262 | 242 | 242 | 238 | 234 | 7,212 | 7,983 | 9,226 | 10,187 | 10,844 |
| அலுவல்சார் (தேறிய) .. | 172 | 153 | 139 | 154 | 135 | 4,828 | 5,114 | 5,311 | 6,588 | 6,190 |
| 5. நடைமுறைக் கணக்கு நிலுவை (3+4) | — 410 | — 363 | — 265 | — 290 | — 290 | —11,048 | —11,909 | —10,093 | —12,377 | —12,997 |
| 6. நாணயமல்லா மூலதனம் (தேறிய) ... | 323 | 279 | 234 | 194 | 252 | 9,062 | 9,094 | 9,058 | 8,308 | 12,235 |
| நேரடி முதலீடு .. | 24 | 24 | 45 | 32 | 21 | 679 | 784 | 1,727 | 1,382 | 986 |
| தனியார் நீண்ட தவணை (தேறிய) | 31 | 15 | 6 | — 32 | — 23 | 847 | 514 | 213 | — 1,341 | — 1,051 |
| தனியார் குறுகிய தவணை (தேறிய) | 3 | — 11 | 30 | 12 | 87 | 120 | — 377 | 1,217 | 474 | 4,328 |
| அரசு நீண்ட தவணை (தேறிய) .. | 270 | 251 | 153 | 182 | 167 | 7,416 | 8,173 | 5,901 | 7,793 | 7,972 |
| உட்பாய்ச்சல் ... | 342 | 350 | 265 | 304 | 291 | 9,422 | 11,425 | 10,162 | 13,042 | 13,744 |
| வெளிப்பாய்ச்சல் ... | 72 | 99 | 112 | 122 | 124 | 2,006 | 3,252 | 4,261 | 5,249 | 5,772 |
| 7. பெறுமதி சீராக்கங்கள் ... | — | — | — | — | — | 1,491 | 1,371 | 1,841 | 7 | — 338 |
| 8. சிஎஉ ஒதுக்கீடுகள் .. | — | — | — | — | — | — | — | — | — | — |
| 9. பிழைகளும் தவிர்ப்புகளும் .. | — 29 | 19 | — 31 | + 32 | — 29 | — 205 | — 330 | — 2,030 | 723 | — 805 |
| 10. மொத்த நிலுவை | — 111 | — 65 | — 62 | — 64 | — 67 | — 1,060 | — 1,774 | — 1,224 | — 3,339 | — 1,905 |
| 11. நாணய அசைவுகள் (– மிகை) .. | 111 | 65 | 62 | 64 | 67 | 1,060 | 1,774 | 1,224 | 3,339 | 1,905 |
| செலாவணிவீதம் ரூ/சிஎஉ | | | | | | 27.63 | 32.90 | 38.10 | 42.76 | 46.18 |
| மொ. உ. உ. இன் விகிதம் சதவீதங்களில் | | | | | | | | | | |
| வர்த்தகக் கணக்கு | | | | | | — 12.10 | — 11.90 | — 10.17 | — 10.93 | — 9.78 |
| நடைமுறைக் கணக்கு | | | | | | — 6.97 | — 6.67 | — 5.12 | — 5.58 | — 5.14 |
| நடைமுறைக் கணக்கு, கொடைகள் நீங்கலாக | | | | | | — 9.90 | — 9.47 | — 7.81 | — 8.54 | — 7.59 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை

குறிப்பு: நாணயத்துறையிலுள்ள எல்லா கொடுக்கல் வாங்கல்களும் கால முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

மீதான தாக்கம் குறைவடைந்து காணப்பட்டபோதிலும், இதனை மனநிறை வினைத் தரும் ஒரு அபிவிருத்தியாகக் கொள்ள முடியாது. இவ்வாண்டில் ஒன்று சேர்ந்த குறுகியகால படுகடனின் அரைப்பங்கிற்கும் கூடுதலான தொகையை மத்திய வங்கி செலுத்தக்கூடியதாக இருந்தபோதிலும் 1990 இல் மீளச் செலுத்தப்படவேண்டிய ஒன்று சேர்ந்த குறுகியகால வர்த்தகக் கொடு கடன்கள் சில இருந்தன. எனவே, ஏற்றுமதிச் செயலாற்றத்தில் கணிசமான முன்னேற்றம், திறமையான இறக்குமதிப் பதிலீடு, படுகடனை உருவாக்கா மூலதனத்தின் பெருமளவு உட்பாய்ச்சல்கள், முக்கியமாக வெளிநாட்டு தனியார் நேரடி முதலீடுகள் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு சீராக்க முயற்சிகள் தொடரப்படாவிட்டால் இலங்கையின் சென்மதி நிலுவை நிலைமை தொடர்ந்தும் தாக்கத்திற்குள்ளானதாகவே விளங்கும்.

**சென்மதி நிலுவைச் செயலாற்றம்**

**வணிகக் கணக்கு**

1989 இல் ஏற்றுமதி வருவாய்கள் கிட்டத்தட்ட 10 சதவீதத்தால் அதிகரித்தன. 1989 இல் சிஎஉ 12,060 இலட்சமாக விளங்கிய இவ்வருவாய்கள் 1985 இன் மட்டமான சிஎஉ 12,960 இலட்சத்தைவிடக் குறைவாக விளங்கிய வேளையில் இவை 1986 இலிருந்து உறுதியாக ஆனால் மெதுவாக ஆண்டிற்கு 5 சதவீதத்திற்கும் மேலான சராசரி வீதத்தால் அதிகரித்தன. இதேவேளையில், 1986 இன் இறக்குமதி மட்டத்திலிருந்து முன்னைய இரண்டு வருடங்களில் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகள் மீதான செலவு மீண்டும் 1986 மட்டத்திற்கும் மேலாக 1989 இல் சிஎஉ 17,480 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதனால் வணிகக் கணக்கிலான பற்றாக்குறை 1989 இல் சிஎஉ 5,420 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இது 1988 இன் பற்றாக்குறையைவிட 5 சதவீதம் குறைவாக விளங்கியபோதிலும், 1987 இன் பற்றாக்குறையைவிட 3 சதவீதம் அதிகரித்திருந்தது. 1989 இல் வணிகக் கணக்கினதும், இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தினதும் விபரமான பகுப்பாய்வு முந்திய அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளது.

**பணிகள் கணக்கு**

1989 இல் பணிகள் கணக்கில் காணப்பட்ட சாதகமான திருப்பத்தினைத் தவிர, பணிகள் கணக்கு மீதான பொதுவான செயலாற்றம் சிறு மாற்றத்தைப் பிரதிபலித்தது. (அட்டவணை 1.45) துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி என்பவற்றிலிருந்தான தேறிய வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் 1989 இலும் 1988 இன் மட்டமான சிஎஉ 50 இலட்சத்திலேயே விளங்கியது. இது பெறுகைகள், கொடுப்பனவுகள் ஆகிய இரண்டிலுமான சிஎஉ 50 இலட்ச வீழ்ச்சியின் கூட்டு விளைவால் ஏற்பட்டதாகும்.

பயணம் மற்றும் அதனுடன் இணைந்த பணிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலாவணி வருவாய்கள் 1988 இன் சிஎஉ 20 இலட்சப் பற்றாக்குறையிலிருந்து 1989 இல் சிஎஉ 30 இலட்ச மிகைக்கு அதிகரித்தது. இது முக்கியமாக நாட்டின் உள்நாட்டு நிலைமையில் ஏற்பட்ட முன்னேற்றத்தைத் தொடர்ந்து, ஆண்டின் இறுதிப் பகுதியில் சுற்றுலா வருகைகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பால் ஏற்பட்டதாகும்.

அட்டவணை 1.45

## பணிகளும் மாற்றல்களும் 1985 – 1989

| விடயம் | சிஎஉ. ப. இ. | | | | | ரூ. ப. இ. | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988 (அ) | 1989 (ஆ) | 1985 | 1986 | 1987 | 1988 (அ) | 1989 (ஆ) |
| 1. துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி .. | — 5 | — 3 | 2 | 5 | 6 | — 154 | — 86 | 25 | 205 | 282 |
| வரவுகள் .. | 73 | 84 | 89 | 95 | 102 | 2,016 | 2,760 | 3,366 | 4,057 | 4,677 |
| கொடுப்பனவுகள் .. | 78 | 87 | 87 | 90 | 96 | 2,170 | 2,844 | 3,341 | 3,852 | 4,395 |
| 2. பயணம் ... | 35 | 25 | 7 | — 2 | 3 | 975 | 808 | 258 | 87 | 166 |
| வரவுகள் .. | 81 | 71 | 55 | 48 | 56 | 2,233 | 2,326 | 2,107 | 2,072 | 2,637 |
| கொடுப்பனவுகள் .. | 46 | 46 | 48 | 50 | 53 | 1,258 | 1,518 | 1,849 | 2,159 | 2,471 |
| 3. முதலீட்டு வருவாய் .. | — 125 | — 117 | — 123 | — 122 | — 128 | -3,445 | -3,871 | -4,699 | -5,266 | -5,906 |
| வரவுகள் .. | 82 | 58 | 53 | 52 | 45 | 2,261 | 1,893 | 2,055 | 2,197 | 2,074 |
| கொடுப்பனவுகள் .. | 207 | 175 | 176 | 174 | 173 | 5,706 | 5,764 | 6,754 | 7,463 | 7,980 |
| 3.1 இலாபங்களும், பங்கிலாபங்களும் .. | — 11 | — 16 | — 26 | — 13 | — 12 | — 297 | — 501 | -1,025 | — 581 | — 562 |
| வரவுகள் .. | — | — | — | 1 | ... | 5 | 15 | 8 | 20 | 20 |
| கொடுப்பனவுகள் .. | 11 | 16 | 26 | 14 | 12 | 302 | 516 | 1,033 | 601 | 582 |
| 3.2 வட்டி .. | — 114 | — 101 | — 97 | — 109 | — 116 | -3,148 | -3,370 | -3,674 | -4,685 | -5,344 |
| வரவுகள் .. | 82 | 58 | 53 | 51 | 45 | 2,256 | 1,878 | 2,047 | 2,177 | 2,054 |
| கொடுப்பனவுகள் — | 196 | 159 | 150 | 160 | 161 | 5,404 | 5,248 | 5,721 | 6,862 | 7,398 |
| 4. அரச பணிகள் .. | — 6 | — 3 | 1 | 1 | 1 | — 152 | — 125 | 45 | 68 | 55 |
| வரவுகள் .. | 11 | 12 | 16 | 17 | 17 | 310 | 383 | 609 | 735 | 785 |
| கொடுப்பனவுகள் .. | 17 | 15 | 15 | 16 | 16 | 462 | 508 | 564 | 667 | 730 |
| 5. ஏனைய பணிகள் .. | — 32 | — 11 | — 7 | 4 | 1 | — 871 | — 344 | — 254 | 196 | 88 |
| வரவுகள் .. | 76 | 98 | 94 | 94 | 92 | 2,106 | 3,239 | 3,584 | 4,036 | 4,293 |
| கொடுப்பனவுகள் .. | 108 | 109 | 101 | 90 | 91 | 2,977 | 3,583 | 3,838 | 3,840 | 4,205 |
| 6. மொத்தப் பணிகள் .. | — 133 | — 110 | — 120 | — 114 | — 117 | -3,647 | -3,616 | -4,625 | -4,884 | -5,315 |
| வரவுகள் .. | 323 | 323 | 307 | 306 | 312 | 8,926 | 10,601 | 11,721 | 13,097 | 14,466 |
| கொடுப்பனவுகள் .. | 456 | 432 | 427 | 420 | 429 | 12,573 | 14,217 | 16,346 | 17,931 | 19,781 |
| 7. தனியார் மாற்றல்கள் ... | 262 | 242 | 242 | 238 | 234 | 7,212 | 7,983 | 9,226 | 10,186 | 10,844 |
| வரவுகள் .. | 288 | 269 | 270 | 266 | 263 | 7,920 | 8,873 | 10,324 | 11,386 | 12,201 |
| கொடுப்பனவுகள் .. | 26 | 27 | 28 | 28 | 29 | 708 | 890 | 1,098 | 1,200 | 1,357 |
| 8. அலுவல்சார் மாற்றல்கள் .. | 172 | 153 | 139 | 154 | 136 | 4,828 | 5,114 | 5,311 | 6,588 | 6,190 |
| வரவுகள் .. | 172 | 153 | 139 | 154 | 136 | 4,828 | 5,114 | 5,311 | 6,588 | 6,190 |
| கொடுப்பனவுகள் .. | — | — | — | — | — | — | — | — | — | — |
| 9. மொத்த மாற்றல்கள் ... | 434 | 395 | 381 | 392 | 370 | 12,040 | 13,097 | 14,537 | 16,774 | 17,034 |
| வரவுகள் ... | 460 | 422 | 409 | 420 | 399 | 12,748 | 13,987 | 15,635 | 17,974 | 18,391 |
| கொடுப்பனவுகள் ... | 26 | 27 | 28 | 28 | 29 | 708 | 890 | 1,098 | 1,200 | 1,357 |

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி

1989 இல் முதலீட்டு வருமானத்தின் தேறிய வெளிப்பாய்ச்சல் சிஉ 1,280 இலட்சமாக விளங்கி முன்னைய 3 ஆண்டுகளைவிட ஓரளவு அதிகரித்துக் காணப்பட்டது. இது உட்பாய்ச்சலில் ஏற்பட்ட குறைப்பால், முக்கியமாக மத்திய வங்கி வைத்திருக்கும் வெளிநாட்டு முதலீட்டுப் பட்டியல் மீதான வட்டி வருவாய்களில் ஏற்பட்ட குறைப்பின் விளைவால் ஏற்பட்டதாகும். இதேவேளையில் வதிவல்லா முதலீட்டாளர்களால் அனுப்பப்பட்ட இலாபங்கள், பங்கிலாபங்கள் வடிவிலான செலாவணி 1988 இன் சிஉ 140 இலட்சத்திலிருந்து 1989 இல் சிஉ 120 இலட்சத்திற்கு மேலும் வீழ்ச்சியடைந்தது. முன்னைய ஆண்டுகளைப்போலவே, வெளிநாட்டுக்கடன்கள் மீதான வட்டிக்கொடுப்பனவுகள் சிஉ 1,610 இலட்சமாக விளங்கி, பணிகள் கணக்கில் சிஉ 4,180 இலட்சம் கொண்ட மொத்தக் கொடுப்பனவுகளின் முக்கிய பகுதிக்கு வகை கூறியது.

மாற்றல்கள் கணக்கு

1989 இல் மாற்றல்களிலிருந்தான தேறிய பெறுகைகள் சிஉ 3,700 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்ததுடன், 1985 இலிருந்து அடையப்பட்ட மட்டத்தினைவிட மிகக் குறைவானதாகும். இது தனியார், அலுவல்சார் மாற்றல்களிலிருந்தான மொத்தப் பெறுகைகளான சிஉ 3,990 இலட்சம்கொண்ட குறைப்பினால் ஏற்பட்டதாகும். வெளிநாடுகளிலிருந்தான தொழிலாளர் பண அனுப்பல்களைப் பெருமளவில் கொண்டிருக்கும் தனியார் மாற்றல்களிலிருந்தான செலாவணிப் பெறுகைகள் சிஉ 2,630 இலட்சமாக விளங்கி 1988 இன் மட்டத்தைவிடச் சிறிதளவு மட்டும் குறைவாக விளங்கியது. அலுவல்சார் மாற்றல்கள் சிஉ 1,360 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டைவிட 12 சதவீதம் குறைவாக விளங்கியது.

மூலதனக் கணக்கு

1989 இல் தேறிய நாணயமல்லா மூலதன உட்பாய்ச்சல்கள் சிஉ 2,520 இலட்சமாக விளங்கி, முன்னைய ஆண்டைவிட 30 சதவீத அதிகரிப்பைப் பிரதிபலித்து முன்னைய 4 ஆண்டுகளில் பதிவு செய்யப்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியிலிருந்து திருப்ப நிலையையடைந்தது. எனினும், இவ் அதிகரிப்பானது அனேகமாக வர்த்தகக் கொடுகடன்களின் அதிகரித்த பாவனையாலும், தற்காலிக சென்மதி நிலுவை இடர்ப்பாடுகளிலிருந்து மீள்வதற்கான கோதுமை இறக்குமதிகளுக்கான ஐக்கிய அமெரிக்க நாடுகளிலிருந்தான வர்த்தகக் கடனாலும் ஏற்பட்டது. இவ்வாண்டில் நேரடி முதலீடுகள் 1988 இன் மட்டத்திலிருந்து சிஉ 210 இலட்சத்திற்கு 34 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தவேளையில், தனியார் நீண்ட காலக் கடன்கள் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் பெறுகைகளை விஞ்சி, முன்னைய ஆண்டின் தேறிய வெளிப்பாய்ச்சலான சிஉ 320 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் சிஉ 230 இலட்சம் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலை விளைவித்தன. எனினும், குறுகியகால மூலதன உட்பாய்ச்சலைப் பொறுத்தமட்டில் உட்பாய்ச்சல்கள் 1988 இன் சிஉ 120 இலட்சத்திலிருந்து 1989 இல் சிஉ 870 இலட்சங்களுக்கு 7 மடங்கிற்கு அதிகரித்துக் கடந்த 5 வருடங்களில் இவ்விடயத்தின்கீழ் அதிகூடிய ஆண்டுப் பாய்ச்சலைப் பிரதிபலித்தது. நேரடி முதலீடு, நீண்ட, நடுத்தரக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் மீள் கொடுப்பனவுகளும் என்பவற்றை உள்ளடக்கிய தேறிய தனியார் மூலதன உட்பாய்ச்சல்கள் சிஉ 850 இலட்சமாக விளங்கி, கடந்த 5 ஆண்டுகளில் அதிகூடிய மட்டத்தை அடைந்தது. 1988 இன் சிஉ 1,820 இலட்சத்திலிருந்து

# அட்டவணை 1.46

## வெளிநாட்டு மூலவளங்களின் இடைவெளிக்கான நிதியிடல் 1985—1989

| வகை | சி.எ.உ. பத்து இலட்சம் 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) | பத்து இலட்சம் ரூபாய்களில் 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1. வெளிநாட்டுப் பெறுகைகள் .. | 1,907 | 1,622 | 1,654 | 1,670 | 1,781 | 52,574 | 53,367 | 63,142 | 71,468 | 82,761 |
| 1.1 ஏற்றுமதி . | 1,296 | 1,030 | 1,077 | 1,098 | 1,206 | 35,728 | 33,893 | 41,097 | 46,985 | 56,904 |
| 1.2 பணிகள் . | 323 | 323 | 307 | 306 | 312 | 8,926 | 10,601 | 11,721 | 13,097 | 14,466 |
| 1.3 தனியார் மாற்றல்கள் . | 288 | 269 | 270 | 266 | 263 | 7,920 | 8,873 | 10,324 | 11,386 | 12,201 |
| 2. வெளிநாட்டுக் கொடுப்பனவுகள் | | | | | | | | | | |
| 2.1 இறக்குமதிகள் .. | 2,980 | 2,623 | 2,488 | 2,598 | 2,618 | 82,313 | 86,201 | 94,836 | 111,115 | 120,886 |
| 2.2 பணிகள் .. | 2,007 | 1,678 | 1,602 | 1,666 | 1,748 | 55,529 | 55,283 | 61,102 | 71,253 | 80,810 |
| 2.3 தனியார் மாற்றல்கள் .. | 456 | 432 | 428 | 420 | 429 | 12,573 | 14,218 | 16,346 | 17,981 | 19,781 |
| 2.4 மூலதன மீள் கொடுப்பனவுகள் .. | 26 | 27 | 28 | 28 | 29 | 708 | 890 | 1,098 | 1,200 | 1,357 |
| 3. வெளிநாட்டு மூலதன இடைவெளி .. | 491 | 486 | 430 | 484 | 412 | 13,503 | 15,810 | 16,290 | 20,681 | 18,938 |
| 4. மூலதன இடைவெளியை நிதியிடல் .. | — 1,073 | — 1,001 | — 834 | — 928 | — 837 | —29,739 | —32,834 | —31,694 | —39,647 | —38,125 |
| 4.1 மத்திய அரசு .. | + 1,073 | + 1,001 | + 834 | + 928 | + 837 | + 29,739 | + 32,834 | + 31,694 | + 39,647 | + 38,125 |
| கொடைகள் .. | 514 | 503 | 404 | 458 | 427 | 14,250 | 16,539 | 15,473 | 19,630 | 19,933 |
| செயற்றிட்ட உதவி .. | 172 | 153 | 139 | 154 | 136 | 4,828 | 5,114 | 5,311 | 6,588 | 6,190 |
| பண்ட உதவி .. | 273 | 257 | 207 | 208 | 182 | 7,564 | 8,414 | 7,934 | 8,885 | 8,503 |
| உணவு உதவி .. | 23 | 29 | 13 | 21 | 22 | 620 | 943 | 504 | 918 | 1,023 |
| யூரோ — டொலர் கடன்கள் .. | 24 | 27 | 19 | 26 | 21 | 650 | 870 | 695 | 1,129 | 1,025 |
| ஏனைய நீண்ட கால . | — | — | — | — | — | — | — | — | — | — |
| குறுகிய கால .. | 22 | 37 | 26 | 49 | 66 | 588 | 1,198 | 1,029 | 2,110 | 3,192 |
| 4.2 தனியார் துறை .. | — | — | — | — | — | — | — | — | — | — |
| நேரடி முதலீடு .. | 441 | 353 | 328 | 271 | 326 | 12,177 | 11,555 | 12,608 | 11,577 | 15,397 |
| நிரம்பலர் கொடுகடன்கள் .. | 26 | 25 | 45 | 34 | 23 | 715 | 810 | 1,766 | 1,456 | 1,061 |
| வர்த்தகக் கடப்பாடுகள். .. | 21 | 7 | 4 | 3 | 1 | 549 | 229 | 162 | 116 | 48 |
| குறுகிய கால .. | 67 | 64 | 74 | 38 | 26 | 1,858 | 2,117 | 2,846 | 1,630 | 1,183 |
| 4.3 ஏனையவை .. | 327 | 257 | 205 | 196 | 276 | 9,055 | 8,399 | 7,834 | 8,375 | 13,105 |
| பநாநி எடுப்பனவுகள் .. | 147 | 135 | 133 | 166 | 113 | 2,027 | 3,699 | 3,802 | 7,710 | 3,938 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் ... | — | — | — | 153 | 67 | 237 | 1,614* | 1,120* | 7,317* | 3,412* |
| இருபுடை நிலுவைகள் .. | — | — | 42 | — | 45 | 3 | — | 1,801 | — | 2,401 |
| ஏனையவை .. | — | — | — | — | — | — | — | — | — | — |
| வெளிநாட்டுச் சொத்துக்கள் .. | 23 | 16 | 15 | 18 | 20 | 1,213 | 870 | 1,863 | 939 | 2,489 |
| 4.4 சமப்படுத்தும் விடயங்கள் .. | 124 | 119 | 76 | — 5 | — 19 | 574 | 1,215 | — 932 | — 546 | — 4,364 |
| பெறுமதிச் சீராக்கம் .. | — 29 | 10 | — 31 | 33 | — 29 | 1,285 | 1,041 | — 189 | 730 | — 1,143 |
| பிழைகளும் தவறுகளும் .. | — | — | — | — | — | 1,491 | 1,371 | + 1,841 | 7 | — 338 |
| 4.5 மொத்த நிதியிடல் . | — 29 | 10 | — 31 | 33 | — 29 | — 206 | — 330 | — 2,230 | 723 | — 805 |
| 5. சென்மதி நிலுவையின் மீதான தாக்கம் (இ) .. | 1,073 | 1,001 | 834 | 928 | 837 | 29,739 | 32,834 | 31,694 | 39,647 | 38,125 |
| 5.1 உதவி இறக்குமதிகளுடன் (சதவீதப் புள்ளிகளில்) | | | | | | | | | | |
| 5.2 உதவி இறக்குமதிகளுக்குச் சீராக்கம் .. | 56.3 | 61.7 | 50.4 | 55.6 | 47.0 | | | | | |
| செய்யப்பட்டுள்ளது (சதவீதப் புள்ளிகளில்) .. | 37.7 | 41.1 | 34.2 | 36.6 | 32.8 | | | | | |

(அ) திருத்தப்பட்டது

(ஆ) தற்காலிகமானவை

(இ) சென்மதி நிலுவையின் மீதான உ முத்தத்தினைக் காட்டும் சுட்டெண் பின்வருமாறு பெறப்பட்டது: $\frac{\text{விடயம் 3}}{\text{விடயம் 1}} \times 100$

* ப. நா. நி. பிரதிநிதித்துவ வீதத்தின் மாற்றங்கள் காரணமான மீள் பெறுமதித் தாக்கங்களை உள்ளடக்கும்.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## வெளிநாட்டுச் சொத்துக்கள்

காலாண்டுதோறும்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.47

## இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1985—1989

| உடைமையாளர் (கால முடிவில்) | சி. எ. உ. பத்து இலட்சத்தில் (அ) | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
| 1. அரசு (ஆ) ... | 34.5 | 23.0 | 8.5 | 13.3 | 32.3 | 1,038.7 | 801.6 | 373.7 | 589.8 | 1,696.1 |
| 2. அரச முகவர் நிலையங்கள் ... | — | — | — | — | — | 0.6 | 0.6 | 0.9 | 0.9 | 1.0 |
| 3. மத்திய வங்கி ... | 386.2 | 273.7 | 202.5 | 193.0 | 191.3 | 11,602.3 | 9,547.0 | 8,839.8 | 8,575.0 | 9,962.5 |
| 4. வர்த்தக வங்கிகள் ... | 190.2 | 195.0 | 212.3 | 221.8 | 223.2 | 5,725.8 | 6,802.9 | 9,264.9 | 9,859.7 | 11,729.9 |
| 5. மொத்தம் ... | 610.9 | 491.7 | 423.3 | 428.1 | 446.8 | 18,367.4 | 17,152.1 | 18,479.3 | 19,025.4 | 23,389.5 |
| 6. மாதங்களின்படி மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் | | | | | | | | | | |
| (அ) வணிக வர்த்தக இறக்குமதிகள் | 3.7 | 3.5 | 3.2 | 3.1 | 3.1 | | | | | |
| (ஆ) பொருட்கள் பணிகள் இறக்குமதி ... | 3.0 | 2.8 | 2.5 | 2.5 | 2.5 | | | | | |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்குகளின் கீழான சில விடயங்கள் மட்டும் பன்னாட்டு நாணயநிதியத்துடன் இணங்கப்பட்ட பிரதிநிதித்துவ வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன. இவை தவிர்ந்த ஏனையவை கீழே தரப்பட்டுள்ள ஆண்டு முடிவு வீதங்களில் மாற்றப்பட்டுள்ளன.

| ஆண்டு | 1985 | 1986 | 1987 | 1988 | 1989 |
|---|---|---|---|---|---|
| சி.எ.உ. ஒன்றுக்கு ரூபா | 30.10 | 34.89 | 43.64 | 44.45 | 52.57 |

(ஆ) திறைசேரி துணைச் செயலாளரின் சிறப்புச் சுழல்வுக் கொடுகடன் நிலுவைகளை உள்ளடக்குவதற்காக 1985இலிருந்தான எண்தொகைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன.

1989 இல் சிஎஉ 1,670 இலட்சத்திற்கு 8 சதவீதத்தினால் வீழ்ச்சியுற்ற அரசின் தேறிய மூலதன உட்பாய்ச்சல்கள் அநேகமாகச் செயற்றிட்டக் கடன்களின் பகிர்ந்தளிப்புக்களில் ஏற்பட்ட 12 சதவீத வீழ்ச்சியினால் ஏற்பட்டதாகும்.

**வெளிநாட்டு மூலவள இடைவெளி**

அலுவல்சார் கொடைகள் நீங்கலான, நடைமுறைக் கொடுக்கல் வாங்கல் களின் பெயரிலான மொத்த வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளுக்கும், அத்தகைய கொடுக்கல் வாங்கல் மூலதன மீள் கொடுப்பனவுகள் என்பன தொடர் பான மொத்த வெளிநாட்டுச் செலாவணிக் கொடுப்பனவுகளுக்கும் இடையேயான வேறுபாடு என வரைவிலக்கணம் கூறப்படும் வெளிநாட்டு மூலவள இடைவெளி 1988 இன் சிஎஉ 9,280 இலட்சத்திலிருந்து (ரூ. 396,470 இலட்சம்), 1989 இல் சிஎஉ 8,370 இலட்சத்திற்கு (ரூ. 381,250 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. இதற்கு மொத்தக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பை விட மொத்தப் பெறுகைகளில் ஏற்பட்ட கணிசமான ஒரு அதிகரிப்பே காரணமாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடிய வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் முற்றாக ஏற்றுமதி வருவாய்களில் பிரதிபலிக்கப்பட்ட வேளையில், கொடுப் பனவுகளில் ஏற்பட்ட வளர்ச்சியானது மூலதன மீள் கொடுப்பனவுகளில் ஏற் பட்ட வீழ்ச்சியால் எதிரீடு செய்யப்பட்ட இறக்குமதிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் தேறிய விளைவாகும். உதவி நிதியிடப்பட்ட இறக்குமதி கள் தவிர்ந்த வெளிநாட்டு மூலவள இடைவெளி 1988 இன் சிஎஉ 6,110 இலட்சத்திலிருந்து 1989 இல் சிஎஉ 5,800 இலட்சத்திற்கு 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

வெளிநாட்டு மூலவள இடைவெளியின் (சிஎஉ 4,270 இலட்சம்) அரைவாசிக்கு மேற்பட்ட தொகை அநேகமாகக் கொடைகள், செயற்றிட்ட உதவி மூலமாக மத்திய அரசால் நிதியிடப்பட்டது. முக்கியமாகக் குறுகிய காலக் கடன்பாடு களூடாகத் தனியார் துறையால் மேலும் 39 சதவீதம் நிதியிடப்பட்டது. மொத்தத் தனியார் துறை நிதியிடலில் நேரடி முதலீடு 7 சதவீதத்திற்கு மட்டும் வகை கூறியது. 1989 இல் வெளிநாட்டு மூலவள இடைவெளியை நிதியிடுவதற்கு நேரடி முதலீட்டையும் கொடைகளையும் உள்ளடக்கிய படுகடன் உருவாக்காத மூலதன உட்பாய்ச்சல்கள், சிஎஉ 1,590 இலட்சத்தை (19 சதவீதம்) பங்களிப்புச் செய்தன. அமைப்புச் சீராக்க வசதியின் கீழான சிஎஉ 670 இலட்சம் கொண்ட எடுப்பனவு வெளிநாட்டு இடைவெளியின் 8 சதவீதத்தை ஈடுசெய்யப் போதுமான தாக இருந்தது.

பொருட்கள், பணிகள் மற்றும் தனியார் மாற்றல்கள் என்பவற்றின் ஏற்று மதியிலிருந்து கிடைத்த மொத்த வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகளுக்கான வெளிநாட்டு மூலவள இடைவெளியின் விகிதமானது சென்மதி நிலுவை மீதான உடனடித் தாக்கத்தினை எடுத்துக் காட்டும் ஒரு சுட்டெண்ணாகும். இச் சுட் டெண் 1988 இன் 55.6 சதவீதத்திலிருந்து 1989 இல் 47.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்து, கடந்த 5 வருட காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் சென்மதி நிலுவை மீதான தாக்கத்தில் ஒரு குறைப்பை எடுத்துக் காட்டியது. இச் சுட் டெண் உதவிகளின் கீழான இறக்குமதிகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட வேளை யிலும் 1988 இன் 36.6 சதவீதத்திலிருந்து 1989 இல் 32.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

## தாக்கமுள்ள செலாவணி வீதங்கள் *

1980 = 100




இலங்கை மத்திய வங்கி.

* வீழ்ச்சி தேய்வினைக் குறிக்கின்றது.

## அட்டவணை 1.48

### பகிர்ந்தளிக்கப்பட்டதும் வெளிநின்றதுமான வெளிநாட்டுப் படுகடன் 1985–1989

| விடயம் | சி.எ.உ. பத்து இலட்சம் | | | | | ரூபா பத்து இலட்சம் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988 (அ) | 1989 (ஆ) | 1985 | 1986 | 1987 | 1988 (அ) | 1989(ஆ) |
| 1. நடுத்தர, நீண்டகால படுகடன் ... | 3,086 | 3,227 | 3,220 | 3,515 | 3,649 | 91,804 | 111,816 | 138,411 | 155,275 | 190,890 |
| 1.1 அரசு ... | 2,333 | 2,551 | 2,607 | 2,849 | 2,996 | 70,026 | 88,760 | 112,805 | 126,152 | 158,656 |
| 1.2 அரச உத்தரவாதத்துடனான பொதுக் கூட்டுத்தாபனங்கள் ... | 306 | 244 | 224 | 184 | 169 | 9,212 | 8,497 | 9,703 | 8,137 | 8,968 |
| 1.3 அரச உத்தரவாதத்துடனான தனியார்துறை ... | 30 | 64 | 96 | 98 | 88 | 922 | 2,246 | 4,139 | 4,359 | 4,638 |
| 1.4 அரச உத்தரவாதமற்ற பொதுக் கூட்டுத்தாபனங்கள் ... | 23 | 22 | 8 | 6 | 5 | 715 | 749 | 329 | 284 | 257 |
| 1.5 அரச உத்தரவாதமற்ற தனியார் துறை ... | 101 | 112 | 120 | 124 | 116 | 3,015 | 3,893 | 5,209 | 5,482 | 6,116 |
| 1.6 ப. நா. நி. எடுப்பனவுகள் ... | 293 | 234 | 165 | 254 | 275 | 7,914 | 7,671 | 6,226 | 10,861 | 12,255 |
| 2. குறுங்காலப் படுகடன் ... | 187 | 151 | 192 | 174 | 311 | 5,645 | 5,277 | 8,348 | 7,709 | 16,463 |
| 2.1 மத்திய வங்கிக் கடன்பாடுகள் ... | — | — | 41 | 5 | 50 | 6 | — | 1,801 | 231 | 2,632 |
| 2.2 ஏனைய குறுங்காலப் படுகடன் (இ) | 187 | 151 | 151 | 169 | 261 | 5,639 | 5,277 | 6,547 | 7,478 | 13,831 |
| 3. மொத்தப் படுகடன் (1+2) ... | 3,273 | 3,378 | 3,412 | 3,689 | 3,960 | 97,449 | 117,093 | 146,759 | 162,984 | 207,353 |
| ஒப்பந்தக் குறிப்பு வகைகள் நடுத்தர நீண்டகால கடன்கள் | | | | | | | | | | |
| (1) செயற்றிட்டக் கடன்கள் ... | 1,315 | 1,549 | 1,688 | 1,936 | 2,107 | 39,498 | 53,890 | 73,015 | 85,746 | 111,509 |
| (2) செயற்றிட்டமல்லாக் கடன்கள் ... | 913 | 928 | 855 | 887 | 887 | 27,412 | 32,287 | 37,003 | 39,262 | 46,955 |
| (3) நிரம்பலர் கொடுகடன் ... | 24 | 25 | 30 | 25 | 18 | 687 | 870 | 1,311 | 1,109 | 966 |
| (4) ப.நா.நி. பொறுப்பாண்மை நிதியக் கடன்கள் ... | 86 | 59 | 34 | 18 | 9 | 2,592 | 2,055 | 1,475 | 813 | 479 |
| (5) ப.நா.நி.–ஏனைய கடன்கள் ... | 293 | 234 | 165 | 254 | 275 | 7,914 | 7,671 | 6,226 | 10,861 | 12,255 |
| (6) ஏனையவை (ஈ) ... | 455 | 432 | 448 | 395 | 353 | 13,701 | 15,043 | 19,381 | 17,484 | 18,726 |

மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி.
வெளிநாட்டு மூலவளங்கள் திணைக்களம்

(அ) திருத்தப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின்வற்றுக்கொள்ளப்பட்ட கொடுகடன்களையும் வெளிநாட்டு நாணய வங்கித்தொழில் பிரிவில் இருந்தான கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளுக்கான வர்த்தக கொடுகடன்களையும் கடன்பாடுகளையும் உள்ளடக்குகின்றன.

(ஈ) அரச கூட்டுத்தாபனங்கள், மற்றும் தனியார் துறையின் நீண்ட காலக் கடன்களையும் உள்ளடக்கும்.

அட்டவணை 1.49

## வெளிநாட்டுப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1985 — 1989

| விடயம் | சி. எ. உ. பத்து இலட்சம் | | | | | பத்து இலட்சம் ரூபாய்களில் | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) | 1985 | 1986 | 1987 | 1988(அ) | 1989(ஆ) |
| 1. படுகடன் பணிக் கொடுப்பனவுகள் .. | 340.6 | 356.8 | 383.3 | 402.8 | 371.0 | 9,362 | 11,658 | 14,539 | 17,207 | 16,987 |
| 1.1 கடன் தீர்ப்பனவுகள் .. | 165.5 | 213.5 | 253.5 | 258.8 | 220.3 | 4,533 | 6,940 | 9,623 | 11,033 | 10,072 |
| (i) ப. நா. நிதியத்திற்கு .. | 35.8 | 58.6 | 69.3 | 64.1 | 46.0 | 967 | 1,856 | 2,566 | 2,682 | 2,018 |
| (ii) ஏனையவற்றிற்கு ... | 129.7 | 154.9 | 184.2 | 194.7 | 174.3 | 3,566 | 5,084 | 7,057 | 8,351 | 8,054 |
| 1.2 வட்டிக் கொடுப்பனவுகள் ... | 175.1 | 143.3 | 129.8 | 144.0 | 150.7 | 4,829 | 4,718 | 4,916 | 6,174 | 6,915 |
| (i) ப. நா. நிதியத்திற்கு ... | 27.1 | 21.3 | 18.3 | 18.5 | 22.7 | 746 | 701 | 663 | 772 | 997 |
| (ii) ஏனையவற்றிற்கு .. | 148.0 | 122.0 | 111.5 | 125.5 | 128.0 | 4,083 | 4,017 | 4,253 | 5,402 | 5,918 |
| 2. வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகளிலும் பணிகளிலுமிருந்தான வருவாய்கள் .. | 1,619.0 | 1,352.6 | 1,384.4 | 1,404.0 | 1,518.0 | 44,655 | 44,495 | 52,819 | 60,082 | 70,560 |
| 3. வணிகப் பொருட்கள் ஏற்றுமதிகள் பணிகள் தனியார் மாற்றல்களிலிருந்தான பெறுகைகள் | 1,906.6 | 1,622.4 | 1,654.7 | 1,670.6 | 1,781.0 | 52,574 | 53,367 | 63,143 | 71,468 | 82,761 |
| 4. படுகடன் பணி விகிதங்கள் (இ) | | | | | | | | | | |
| 4.1 2இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் .. | 21.0 | 26.4 | 27.7 | 28.7 | 24.4 | 21.0 | 26.2 | 27.5 | 28.6 | 24.1 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்த்து .. | 17.2 | 20.5 | 21.4 | 22.8 | 19.9 | 17.1 | 20.5 | 21.4 | 22.9 | 19.8 |
| 4.2 3இன் சதவீதமாக | | | | | | | | | | |
| (i) முழு மொத்த விகிதம் .. | 17.9 | 22.0 | 23.2 | 24.1 | 20.8 | 17.8 | 21.8 | 23.0 | 24.1 | 20.5 |
| (ii) ப. நா. நி. கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த .. | 14.6 | 17.1 | 17.9 | 19.2 | 17.0 | 14.5 | 17.1 | 17.9 | 19.2 | 16.9 |
| 5. மேலே உள்ள 1இல் அரசின் பங்கு .. | 134.6 | 161.8 | 170.5 | 199.0 | 201.8 | 3,880 | 5,434 | 6,778 | 8,612.2 | 9,351.7 |
| மேலே உள்ள 1இன் சதவீதம் .. | 39.5 | 45.3 | 44.5 | 49.4 | 54.4 | 41.4 | 46.6 | 46.6 | 50.0 | 55.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தியமைக்கப்பட்டது. (ஆ) தற்காலிகமானவை.

(இ) ரூபாப் பெறுமதிகளையும் சி. எ. உ. பெறுமதிகளையும் பயன்படுத்திக் கணிக்கப்பட்ட படுகடன் பணி விகிதம் வேறுபடுவதற்கு ஆண்டுப் பகுதியில் செலாவணி வீதங்களில் ஏற்பட்ட மாறுபாடுகளே காரணமாகும்.

**வெளிநாட்டுச் சொத்துக்கள்**

1989 இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ. 4,470 இலட்சமாக (ரூ. 233,890 இலட்சம்) விளங்கி, முன்னைய ஆண்டின் மட்டமான சிஎஉ 4,280 இலட்சத்தை (ரூ. 190,250 இலட்சம்) விடச் சிறிதளவு முன்னேற்றத்தை எடுத்துக் காட்டியது. எனினும், இவ்விரு காலப்பகுதிகட்கிடையில் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மேலுமொரு குறைப்பு, சென்மதி நிலுவையின் மொத்தப் பற்றாக்குறையைப் பிரதிபலித்தது.

அரசினதும், மத்திய வங்கியினதும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களை உள்ளடக்கிய மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் 1989 இறுதியில் சிஎஉ 170 இலட்சத்தால் சிஎஉ 2,240 இலட்சத்திற்கு (ரூ 116,580 இலட்சம்) அதிகரித்தன. இது 1988 இறுதியின் சிஎஉ 130 இலட்சத்திலிருந்து (ரூ. 5,900 இலட்சம்) 1989 இன் இறுதியில் சிஎஉ 320 இலட்சங்களுக்கு (ரூ. 16,960 இலட்சம்) அதிகரித்த அரசிடம் உள்ள அலுவல்சார் ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பால் பெரும்பாலும் ஏற்பட்டது. இது ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தான சென்மதி நிலுவை உதவிக் கடனாக விளங்கிய வேளாண்மைத் துறைச் செயற்றிட்டக் கடனின் ஒரு பகுதி பகிர்ந்தளிக்கப்பட்டமையால் ஏற்பட்டதாகும்.

இரு ஆண்டுகளிலும் வர்த்தக வங்கிகளின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் சிஎஉ 2,220 இலட்சத்திலிருந்து (ரூ. 98,600 இலட்சம்) 1989 இல் சிஎஉ 2.230 இலட்சத்திற்கு (ரூ. 117,300 இலட்சம்) சிறிதளவு அதிகரிப்பொன்றைப் பதிவு செய்தன. 1989 இன் இறுதியில் நாட்டின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களினது மட்டம் 1990 இற்குத் திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் ஏறத்தாழ 3 மாதங்களுக்கு நிதியிடப் போதுமானதாக இருந்தது.

**செலாவணி வீத அசைவுகள்**

1989 இல் இலங்கை ரூபா அனைத்து முக்கிய நாணயங்களுக்கெதிராகவும் தேய்வடைந்தது. 1985 இலிருந்து அவதானிக்கப்பட்ட போக்கைத் தொடர்ந்து இலங்கை ரூபா யப்பானிய யென்னிற்கெதிராக 6.6 சதவீதத்தாலும், ஸ்டேர்லிங் பவுணுக்கெதிராக 9.2 சதவீதத்தாலும், இடைநிலை நாணயமான ஐக்கிய அமெரிக்க டொலருக்கெதிராக 17.4 சதவீதத்தாலும் தேய்வடைந்தது. இது டியூச் மாக்கிற்கும் பிரான்சிய பிராங்கிற்கும் எதிராக 22.0 சதவீதத்தாலும், இந்திய ரூபாய்க்கெதிராக 7.4 சதவீதத்தாலும் தேய்வடைந்தது. 1989 இல் சிஎஉ/ரூபா வீதமும் ரூபாவின் பெறுமதி 16.3 சதவீதத்தாலும் தேய்வடைந்ததை எடுத்துக் காட்டியது.

முக்கிய வர்த்தகப் பங்காளர்களுடனான, நிறையேற்றப்பட்ட பெயரளவுச் செலாவணி வீதங்கள் என வரைவிலக்கணம் கூறப்படும் இலங்கையின் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதம், 1989 இல் 10.8 சதவீதத்தால் தேய்வடைந்தது. எனினும் இலங்கைக்கும் அதன் வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையேயான பண வீக்க வேறுபாடுகளுக்காகப் பெயரளவுத் தாக்கமுடைய செலாவணி வீதத்தினைச் சீராக்கம் செய்தமையால் பெறப்பட்ட உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதம் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 4.3 சதவீதத்தால் அதிகரித்தது. 1989 இல் பெயரளவுத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் ஆண்டுச் சராசரி 5.1 சதவீதத்தால் தேய்வடைந்திருக்கையில், உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதத்தின் ஆண்டுச் சராசரி 6.1 சதவீதத்தால் அதிகரித்தது.

**வெளிநாட்டுப் படுகடன்**

1989 இன் இறுதியில் இலங்கையின் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ 39,600 இலட்சமாக விளங்கி, அதிகரிக்கும் போக்கின் தொடர்ச்சியை எடுத்துக் காட்டியது. (அட்டவணை 1.48) முன்னைய ஆண்டைவிட இவ் அதிகரிப்பானது சிஎஉ நியதிகளில் 7 சதவீதமாக விளங்கியது. முன்னைய 4 ஆண்டுகளிலும் காணப்பட்டவாறு நடுத்தர, நீண்டகாலப் படுகடன் தொடர்ந்தும் மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் 90 சதவீதத்திற்கும் கூடுதலான பங்கிற்கு வகை கூறியது. இதேவேளையில், நடுத்தர நீண்டகாலப் படுகடனில் அரசின் பங்கு, 1985 இன் 76 சதவீதத்திலிருந்து 1989 இல் 82 சதவீதத்திற்குக் குறைந்த வேகத்தில் அதிகரித்ததுடன் 1989 இல் 2 சதவீதப் புள்ளிகளால் அதிகரித்தது. நீண்ட, நடுத்தர காலப் படுகடனில் செயற்றிட்ட உதவியின் பங்கு 1985 இன் 42 சதவீதத்திலிருந்து 1989 இல் 58 சதவீதத்திற்கு உறுதியாக அதிகரித்தது. இதேவேளையில் பன்னாட்டு நாணய நிதிய நம்பிக்கை நிதியக் கடன்கள், அரச கூட்டுத்தாபனங்களினதும் தனியார் துறை முயற்சிகள் என்பவற்றின் நீண்ட காலக் கொடுகடன்கள் ஆகியவை மீதான வெளிநிற்கும் படுகடன் 1989 இல் மேலும் வீழ்ச்சியடைந்தது.

மத்திய வங்கியால் மேற்கொள்ளப்பட்ட குறுகியகாலக் கடன்பாடுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்களினாலும், வர்த்தகப் பற்றாக்குறையில் ஏற்பட்ட அதிகரிப்பாலும் குறுகிய காலப் படுகடன் 1989 இல் கணிசமானளவில் அதிகரித்தது.

இதேவேளையில் முக்கியமாக அமைப்புச் சீராக்க வசதியின்கீழ் சிஎஉ 670 இலட்சம் கொண்ட எடுப்பனவு காரணமாக வெளிநின்ற பன்னாட்டு நாணய நிதியக் கடன்கள் 1988 இலிருந்து 1989 இல் 10 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 1989 இன் இறுதியில் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான மொத்த வெளிநின்ற படுகடன் சிஎஉ 2,750 இலட்சமாக விளங்கி மொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனில் 7 சதவீதத்திற்கு வகை கூறியது.

**படுகடன் பணிக் கொடுப்பனவுகள்**

நடுத்தர நீண்டகாலக் கடன்களின் கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் எல்லா வகையான வெளிநாட்டுக் கடன்களுக்குமான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1989 இல் சிஎஉ 320 இலட்சத்தால் சிஎஉ 3,710 இலட்சத்திற்கு விழ்ச்சியடைந்தது. 1989 இல் மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1988 இல் அக் கொடுப்பனவுகளில் நிலவிய கூடிய அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைந்திருக்கையில் பணிக் கொடுப்பனவுகள், 1988 இற்கு முன்னான 3 வருடங்களின்போது பதிவு செய்யப்பட்ட சராசரி மட்டத்திற்கு மேலாக அதிகரித்துக் காணப்பட்டது.

பன்னாட்டு நாணய நிதியக் கடன்களையும் உள்ளடக்கிய கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் 1988 இன் சிஎஉ 2,590 இலட்சத்திலிருந்து 1989 இல் சிஎஉ 2,200 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் இவ்விரு ஆண்டுகட்கிடையிலான வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,440 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,510 இலட்சத்திற்கு அதிகரித்தது. பன்னாட்டு நாணய நிதியக் கடன்களின் பேரிலான மீள் கொடுப்பனவுகள் (மீள் கொடுப்பனவுகள்) 1988 இன் சிஎஉ 640 இலட்சத்தி

லிருந்து 1989 இல் சிஎஉ 460 இலட்சத்திற்கு வீழ்ச்சி அடைந்தன. எனினும், 1989 இல் பன்னாட்டு நாணய நிதியத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 185 இலட்சத்திலிருந்து சிஎஉ 227 இலட்சத்திற்கு அதிகரித்தன.

பொருட்கள், பணிகள் என்பவற்றிலிருந்தான வருவாய்களின் விகிதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1988 இன் 28.7 சதவீதத்திலிருந்து 1989 இல் 24.4 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த இவ் விகிதம் முன்னைய ஆண்டின் 22.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 19.9 சதவீயமாக விளங்கியது. ஏற்றுமதிகள், பணிகள், தனியார் மாற்றல்கள் என்பவற்றிலிருந்தான பெறுகைகளின் விகிதமாக படுகடன் பணிக் கொடுப்பனவுகள் பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்களையும் உள்ளடக்கியவிடத்து 20.8 சதவீதமாகவும் பன்னாட்டு நாணய நிதியக் கொடுக்கல் வாங்கல்கள் நீங்கலாக 17.0 சதவீதமாகவும் விளங்கியது.